# குறுந்தொகை எனும் காதல் தொகை

***முனைவர் தா. ஜெயஷீலா***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
மரியா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, வள்ளியூர்
https://doi.org/10.5281/zenodo.15526532

***ஆய்வுச்சுருக்கம்***

*குறுந்தொகையில் காதல் என்பது கவிதைகளின் மூலம் வெளிப்படும் உணர்வுகளைப் பற்றியது. காதல் என்பது ஆண், பெண் இருவருக்கும் இடையேயான காதல், குடும்பம், திருமணம், இல்லறம் ஆகியவற்றுடன் தொடர்புடையது. இங்கு சொல்லப்படும் காதல் வெறும் உணர்ச்சியாக நில்லாமல் ஒரு நிலைத்தத் தன்மை வாய்ந்த உறவாகக் காட்டப்பட்டுள்ளது.*

## முன்னுரை

*401 பாடல்களின் தொகுப்பாகியக் குறுந்தொகை பதினெண் மேற்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். காதல், காமம், நட்பு போன்ற உணர்ச்சிகள் நிறைந்தக் குறுகிய அடிகள் கொண்டப் பாடல்களின் தொகுப்பே குறுந்தொகை.*

## குறுந்தொகையின் சிறப்பு

*அகப்பாடல்கள் தலைவன் தலைவியின் அந்தரங்க விசுயங்கள் என்பதால் பாடப்பட்டவரின் குறிப்பு இல்லாமல் பாடும் நாகரீகம் தமிழ் நாகரீகம். தொல்காப்பிய மரபும் இதைத்தான் கூறுகின்றது. இன்றைய சினிமாப் பாடல்களை மிஞ்சும் அளவிற்கு முதன்மையான இடம் குறுந்தொகைப் பாடல்களுக்கு உண்டு. பல குறுந்தொகைப் பாடல்கள் சினிமாவில் இடம் பிடித்திருப்பதை நாம் அறிவோம். எடுத்துக்காட்டாக 'யாயும் ஞாயும் யாராகியரோ எந்தையும் நுந்தையும்சு என்றப் பாடலைக் கூறமுடியும். காதல் பற்றி கூறும் அழகிய நூலேக் குறுந்தொகை.*

*காதல் சுரக்கும் குறுந்தொகை:*

*காதல் தான் கவிதை. காதல் என்றச் சொல் கவிதை, கருணை, காவியம், கல்யாணம், கல்வி, காமம், கவலை, கண்ணீர் என்றுப் பலச் சொற்களுக்கு நிறைந்த அர்த்தம் தருகின்றது. காதல் என்றச்சொல் பலருக்கு இனிமை, சிலருக்கு கசப்பு, காதல் என்ற உணர்வு இல்லாமல் எந்தத் தொடர் கதைகளும் இல்லை. சினிமாவும் இல்லை. ஏன் நிஜவாழ்க்கையும் இல்லை.*

## களவொழுக்கம்

*தலைவனும், தலைவியும் சந்திப்பது தான் களவொழுக்கத்தின் ஆரம்பம்.*

***“கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்***
***என்ன பயனும் இல”*** ***(குறள் - 1100)***

*தலைவி தன்னை விரும்புகிறாள் என்றக் குறிப்பை அறிந்தவுடன் தலைவன் அவளை அணுகி அவளோடுப் பேசிப்பழக விரும்புவான். இந்த முதல் சந்திப்பும் அதில் நடைபெறுகின்ற நிகழ்வுகளும் இயற்கைப்புணர்ச்சி என்று அழைக்கப்படுகிறது.*

**காதல் பண்பாடு**

*போனப் பிறவியில் கணவன் மனைவியாக இருந்தவர்கள் தான் இந்தப் பிறவியிலும் கணவன், மனைவி ஆகின்றார்கள், என்ற நம்பிக்கைத் தமிழர் பண்பாட்டில் உள்ளது. காதல் என்பது உயிரோடு பிணைந்து உள்ளத்தால் கலப்பது. உலகெங்கினும் எல்லாப் பண்பாடுகளிலும் காதல் உறுதியானதாகவும், தெய்வீகமானதாகவும் இருக்கின்றது.*

***"இம்மை மாறி மறுமை ஆயினும்***
***நீ யாகியர் என் கணவனை***
***யானாகியர் நின்நெஞ்சு நேர்பவளேசு***

***(குறுந். 49)***

**காத்திருத்தல்**

*எப்போது பார்ப்போம் என்று நெஞ்சில் பதட்டம் நிலவக் காத்திருக்கும் காலம் வேதனைக் கலந்த ஒரு சுகம் தான். துணையின் பொறுமையை இக்காத்திருப்பு நமக்கு உணரச் செய்யும். இச்சிறியக் காலம் கூட நீளமானதாக காதலில் தோன்றும். காதலனைச் சந்திக்கக் காத்திருக்கும் தலைவியை பார்க்க வராமல் மறைந்து இருக்கும் தலைவனைப் பார்த்து தோழி உரைக்கக் கூறிய பாடலும் குறுந்தொகையில் உள்ளது.*

***"இருள் திணிந்தன்ன ஈர்ந்தண் கொழுநிழல்***
***நிலவுக் குவிந்தன்ன வெண்மணல் ஒரு சிறை***
***கருங் கோட்டுப் புன்னை பூம்பொழில் புலம்ப,***
***இன்னும் வாரார்சு வருஉம்,***
***பல் மீன் வேட்டத்து என்னையர் திமிலேசு***

***(குறுந். 20)***

*நிலவும் வந்து விட்டது. மீன் பிடிக்கச் சென்ற நம்முடைய அண்ணன்கள் வரும் வேளையும் வந்து விட்டது. தலைவன் இன்னும் வரவில்லையே. நாம் கிளம்புவோம் என்று கூறுகிறாள் தோழி.*

**களவும் - கற்பும்**

*திருமணத்திற்கு முன்பாக இருக்கும் காதல் வாழ்க்கை களவு எனப்படுகிறது. தலைமக்களின் உள்ள உறுதி அறிந்து பெற்றோர் உடன்பட்டு திருமணம் செய்து வைக்கும் நிலை கற்பு எனப்படுகிறது.*

**உடன்போக்கு**

*பெற்றோர் உடன்படாத நிலையில் தலைவனும், தலைவியும் யாரும் அறியாதவாறு வேற்றூர் செல்வது உடன்போக்கு எனப்படுகிறது.*

**காதலின் ஆழம்**

*காதலின் ஆழத்தை கீழ்காணும் தேவகுலத்தார் பாடல் வரிகள் உணர்த்துகின்றது.*

***"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று***
***நீரினும் ஆர் அளவின்றே - சாரல்***
***கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு***
***பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"***

*தலைவனோடு நான் கொண்ட காதலானது நிலத்தை விட அகலமானது, வானத்தை விட உயரமானது, கடலை விட ஆழமானது என்று தலைவிக் கூறுகின்றாள்.*

**உறங்காத இரவு**

*காதலிக்கத் துவங்கும் காலகட்டத்தில் மகிழ்ச்சியில் தூக்கம் வராதக் காதலர்கள் காதலிக்கத் தொடங்கி பிரிவு ஏற்படும் போது பல நாட்கள் பிரிவு துயரத்தில் தூக்கத்தை இழக்கும் நிலை ஏற்படுகின்றது. இக்கால கட்டத்தில் இரவின் நீளம் சீனப்பெருஞ்சு வரைப் போல் நீண்டுச் செல்கின்றது. இவ்வாறு பிரிவுத் துயரில் மூழ்கியத் தலைவி தன் நிலையை தோழிக்கு உணர்த்திப் பாடியப் பாடல் இது.*

***"எல்லை கழிய முல்லை மலரக்***
***கதிர்சினந் தணிந்த கையறு மலையும்***
...............................................................
...............................................................
***கருங்குல் வெள்ளங் கடலினும் பெரிதே"***

***(குறுந். 22)***

*காலையும், மாலையும் எப்படியெனும் கழித்து விடலாம் தோழி. ஆனால் இரவென்னும் கங்குல் கடலினும் பெரிது இதை எங்ஙனம் கடந்து செல்வேன். நான் என்ன செய்வேன் தோழி என்று தலைவிப் புலம்புகின்றாள்.*

**தலைவியின் அழகின்மை**

*அழகுடையத் தலைவி தலைவனது பிரிவால் அழகிழந்துக் காணப்படுகிறாள்.*

***"மடைமாண் செப்பின் தமிய வைகிய***
***பெய்யாப் பூவின் மெய் சாயினளே"***

***(குறுந். 9)***

*ஒரு செப்பினுள் அழகானப் பூக்களைப் பறித்து அவற்றை யாரும் சூடிக் கொள்ளாமல் மூடி வைத்தால் என்ன ஆகும்? ஒரு பயனும் இல்லாமல் வாடி அழியும் அல்லவா? அதுபோலத் தான் தலைவியின் நிலையும் ஆகும் என்பதை மேற்காணும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.*

**தலைவியின் தவிப்பு**

*உண்மையானக் காதலின் சிறு பிரிவுக் கூடப் பெரும் துயரைத் தருகின்றது. தலைவியை பிரிய நேர்ந்த தலைவன் அத்துயரைத் தாங்கிக் கொள்ள முடியாமல் பாடும் பாடல் அது.*

***"ஆடு அமை பரையும் வனப்பின் பனைத் தோள்***
***பேர் அமர்க் கண்ணி இருந்த ஊரே***
***...........................................................***
***...........................................................***
***பெரு விதுப்பு உற்றன்றால் நோகோ யானே"***

***(குறுந். 21)***

**குறுந்தொகையில் பெண்மையின் நிலை**

*பெண்கள் தங்கள் விரும்பத்தால் காதலில் ஈடுபடலாம் என்றச் செய்தித் தெரிகிறது. இதம் மூலம் பெண்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தவும், காதலில் ஈடுபடவும் முழு சுதந்திரம் பெற்றிருந்தனர் என்பதையும் அறிய முடிகின்றது.*

**தொகுப்புரை**

*உயிர்கள் அனைத்திற்கும் பொதுவான உணர்வு காதல் உணர்வு. மண்ணுலகில் உயிர்களை இயக்கிக் கொண்டிருக்கும் மாபெரும் சக்தி காதல். காதலைப் புகழாத இலக்கியங்களே இல்லை.*

*அகப்புற உணர்வுகள் ஏற்படுத்தும் வலி, காதல் பற்றிய நிலைகள், எதிர்பார்புகள், ஏக்கங்கள், வேதனைகள், மகிழ்ச்சி என அனைத்தும் கலந்தக் கவிதையாகக் குறுந்தொகைப் பாடல்கள் இருக்கின்றன.*

*குறுந்தொகையில் காதல் என்பது கவிதைகளின் மூலம் வெளிப்படுத்தும் ஒரு விரிவானக் கருத்தாகும். குறுந்தொகையின் கவிதைகள் காதல் பற்றிய நமது புரிதலை ஆழமாக்குகின்றன.*

**துணைபுரிந்த நூல்கள்**

1. *வா.வே. சோமசுந்தரனார், குறுந்தொகை, கழக வெளியீடு - 1965.*
2. *பரிமேலழகர், திருக்குறள், வானதி பதிப்பகம், 13 தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை.*